**06.02.2025.**

**MCOP.No.38/2015**

**ம.சா.1 : தங்கதுரை**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) இந்த விபத்து வழக்கிற்கு நான் தான் புகார் கொடுத்தேன். மனுதாரருக்கு சிறு வயதில் இருந்து பேச முடியாது. காது கேட்கும். மனுதாரர் என்னுடைய அப்பா. 12.08.2014 ல் விபத்து நடைபெற்றது. புகார் வாக்குமூலம் ஒரு நாள் கழித்து தான் கொடுத்தேன். விபத்து ஏற்பட்ட உடன் ஆம்புலன்சில் மனுதாரரை அழைத்து சென்றதால் மறுநாள் தான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன்.

2) விபத்தை நான் நேரில் பாக்கவில்லை என்றால் சரிதான். வாசுதேவன் என்பவர் தான் தகவல் தெரிவித்தார். விபத்து எவ்வாறு நடைபெற்றது என்று நேரில் தெரியாது. அண்ணன் சொல்லி தான் தெரியும். என் அப்பா ரோட்டின் ஓரமாக பழைய பாட்டில்களை சேகரித்து விற்பார் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு விபத்து சமயத்தில் 45 வயது இருக்கும். தற்போது 55 வயது.

3) என் அப்பாவிற்கு காது கேட்காது என்றும், என் அப்பா பாட்டில்களை பொறுக்கிக்கொண்டு சாலையில் வரும் போக்குவரத்தை கவனிக்காமல் சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் அப்பா டிரக்டர் டிரைலர் சென்று மோதிவிட்டார் என்றால் டிரக்டரின் டிரைலர் என் அப்பாவின் பின்னால் மோதி விபத்து ஏற்பட்டது.

4) நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், நான் நஷ்டயீடு கோருவதற்கு அவ்வாறு சொல்கிறேன் எனறால் சரியல்ல. மேற்படி விபத்தில் சம்பந்தப்பட்ட டிரக்டருக்கு உரிய எண்டாஸ்மெண்ட் இல்லை, அதற்குரிய அனுமதியும் இல்லை, டிரக்டர் ஓட்டுநருக்கும் தகுதியான ஓட்டுநர் உரிமமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.  என் அப்பாவின் வருமானத்தை நிரூபிப்பதற்கு நான் எந்த வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. என் அப்பாவிற்கு மாதம் சுமார் ரூ. 5000/- வருமானம் வரும்.

5) இந்தவிபத்து என் அப்பாவின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றும், எனவே பாலிசி விதிமுதை மீறல் உள்ளதால் விபத்திற்கு 2 ம் எதிர்மனுதாரர் நஷ்டயீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும், 1 ம் எதிர்மனுதாரர் தான் நஷ்டயீடு கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. நானும், என் அப்பாவும் தனி தனியாக தான் இருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. எனக்கு திருமணம் ஆகிவிட்டதால் குடும்ப அட்டையில் இருந்து பெயர் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

6) குடும்ப அட்டை தாக்கல் செய்தால் இந்த விவரம் தெரிந்துவிடும் என்பதால் நான் அதனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா தனியாக வசித்து வருவதால் அவர் சார்பாக இழப்பீடு மனு தாக்கல் செய்ய தகுதி இல்லை என்றால்

சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் பொருத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S Digitally signed by GANESAN S
Date: 2025.02.06 18:24:15 +0530

**Accidents Claim Tribunal,**
**Attur.**